**செய்தி வெளியீடு எண்: 637** **நாள்: 10.09.2018**

**பொறியியல் பட்டதாரிகளுக்கான செயல்திறன் மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்பு மேம்படுத்துதல் கலந்தாய்வு கூட்டம் மற்றும் தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பவியல் கொள்கை 2018 வெளியீடு நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் ஆற்றிய உரை**

**நாள் : 10.9.2018.**

மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி,

இந்த இனிய நிகழ்ச்சிக்கு வருகை தந்துள்ள

மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன்
**திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே**

மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அண்ணன்
**திரு.திண்டுக்கல் சி.சீனிவாசன் அவர்களே!**

மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அண்ணன்
**திரு கே.ஏ.செங்கோட்டையன் அவர்களே!**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும்
ஆயத்தீர்வை துறை அமைச்சர்
**திரு.பி.தங்கமணி அவர்களே!**

மாண்புமிகு மீன்வளம் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்தத் துறை அமைச்சர்
**திரு. டி.ஜெயகுமார் அவர்களே!**

மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அண்ணன்
**திரு கே.பி.அன்பழகன் அவர்களே!**

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் சகோதரர்
**திரு. எம்.சி.சம்பத் அவர்களே!**

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் சகோதரர்
**திரு.பி.பெஞ்சமின் அவர்களே!**

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மரியாதைக்குரிய
**டாக்டர். நீலோபர் கஃபீல் அவர்களே!**

மாண்புமிகு தகவல் தொழிநுட்பவியல் துறை அமைச்சர் சகோதரர்
**டாக்டர் எம்.மணிகண்டன் அவர்களே!**

மரியாதைக்குரிய தலைமைச் செயலாளர் அவர்களே!

நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களே!
தொழில்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களே!
உயர்கல்வித்துறை முதன்மைச் செயலாளர் அவர்களே!

தொழிலாளர் நலத்துறை அரசு முதன்மை செயலாளர் அவர்களே!
தகவல் தொழில்நுட்பவியல் துறை அரசுச் செயலாளர் அவர்களே!
குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அரசுச் செயலாளர் அவர்களே!
மற்றும் அரசு உயர் அலுவலர்களே!

தொழில் நிறுவனங்களின் தலைமைச் செயல் அலுவலர்களே!
நிர்வாக இயக்குநர்களே மற்றும் உயர்நிலை அலுவலர்களே,!

உயர்கல்வி நிறுவனங்களிலிருந்து வருகை தந்துள்ள பல்வேறு கல்லூரி நிறுவனர்களே!

கல்லூரிகளின் முதல்வர்களே!

பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே,

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தொலை நோக்கு பார்வை-2023ல் தமிழ்நாட்டிலுள்ள மாணாக்கர்களின் வேலை வாய்ப்பு அதிகரிக்கும் நோக்கில் செயல் திறன் மேம்பாட்டில் அதிக கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தை அறிவித்திருந்தார்கள். இதை முன்னெடுத்து செல்லும் வகையில்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் வழியில் நடக்கும் அம்மாவின் அரசு **“பொறியியல் பட்டதாரிகளுக்கான செயல்திறன் மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்பு மேம்படுத்துதல் கலந்தாய்வு கூட்டமும்”** தமிழ்நாடு தகவல்

**தொழில்நுட்பவியல் கொள்கை–2018ஐ** வெளியிடும் நிகழ்ச்சியும் இன்று இங்கே நடைபெறுகிறது. அதை தலைமையேற்று நடத்தி வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் அண்ணா பல்கலைக்கழகத்தின் Madras Institute of Technology வளாகத்தில், திறன் மேம்பாட்டு சிறப்பு பயிற்சி மையமும் மற்றும் ஐந்து பொறியியல் மற்றும் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில், தொழில் திறன் மேம்பாட்டு பயிற்சி நிறுவனங்களும் மாண்புமிகு அம்மாவின் அரசால் நிறுவப்பட்டுள்ளன.

M/s.SIEMENS மற்றும் DESIGN TECH LTD என்ற தொழில் நிறுவனங்களுடன் இணைந்து **546** கோடியே **84** லட்சம் ரூபாய் நிதி மதிப்பீட்டில், இச்சிறப்பு பயிற்சி மையங்கள் வாயிலாக தமிழ்நாட்டில் தொழில்நுட்பக் கல்வி உட்கட்டமைப்பை வலுப்படுத்துதல், தொழிற்சாலைகளுக்கு தேவையான தொழில் திறன்களை மாணாக்கர்களிடையே மேம்படுத்துதல், வேலைவாய்ப்பு பெறுதலுக்கான திறனை அதிகரிக்கச் செய்தல் , தொழிற்சாலைகளின் தற்கால எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றவாறு திறனை மேம்படுத்துதல் ஆகிய முக்கிய பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

இத்திட்டத்தின் மூலம் பட்டய மற்றும் பட்ட வகுப்புகளில் பயின்று வரும் தொழில் நுட்ப மாணவர்களுக்கும் தொழிலகங்களிலிருந்து கலந்து கொள்ளும் பங்கேற்பாளர்களுக்கும், திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்து, அவர்களுக்கு எளிதாக வேலை வாய்ப்பு பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

‘‘தனியார் பொறியியல் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களின் திறன் மேம்படும் வகையில், வெளிநாட்டில் உள்ள கல்லூரிகளில் குறுகிய காலப் பயிற்சி பெற அந்த கல்லூரிகள் வகை செய்வதைப் போன்று, அரசு பொறியியல் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கும் அந்த அரிய வாய்ப்பு கிடைத்திடும் வகையில் அரசு பொறியியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கும் **15**

நாட்கள் தொழில் நுட்ப பயிற்சி பெறும் பொருட்டு வெளிநாடுகளில் உள்ள பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் பயிற்சி பெரும் பொருட்டு அனுப்பி வைக்கப்படுவர்'', என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 23.8.2016 அன்று சட்டப்பேரவையில் சட்டப்பேரவை விதி எண் 110ன் கீழ் அறிவித்தார்கள். இத்திட்டத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் மாணாக்கர்கள் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் 15 நாட்கள் தொழிற் பயிற்சி வகுப்பில் கலந்துக் கொண்டு, தங்கள் அறிவுத் திறனை உலகளவில் மேம்படுத்துவதற்கும், சர்வதேச அளவில் தொழில் நுட்ப கல்வியில் ஏற்பட்டு வரும் வளர்ச்சியினை அறியவும், அவர்களின் ஆய்வு திறனை வளர்க்கவும் வழிவகை செய்தார்கள்.

அந்த வகையில் 2016–17 மற்றும் 2017–18 கல்வியாண்டுகளில் 191 மாணாக்கர்கள், 15 நாட்களுக்கு ஸ்பெயின், தைவான், ஜப்பான், மலேசியா, ஆஸ்திரேலியா மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில்நுட்ப பயிலகங்களில், தொழில்நுட்ப பயிற்சி பெற அனுப்பி வைக்கப்பட்டார்கள். இப்பயிற்சிக்காக, ஆண்டொன்றிற்கு 100 மாணாக்கர்களுக்கு 1.5 கோடி ரூபாய் மாண்புமிகு அம்மாவின் அரசு வழங்கியுள்ளது. இந்த பயிற்சி தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும்.

தமிழ்நாட்டிலுள்ள 7 கல்வி நிறுவனங்களில் தொழில் நுட்பக் கல்வித்தர மேம்பாட்டுத் திட்டம் – III மூலம், இந்தியாவில் உள்ள பிற மாநிலங்களில் உள்ள கல்வி நிறுவனங்களுக்கு வழிகாட்டியாக செயல்பட தமிழ்நாடு தெரிவு செய்யப்பட்டு அக்கல்வி நிறுவனங்களுக்கு பயிற்சி அளித்து வருகிறது.

மாண்புமிகு அம்மா வழியில் செயல்படும் அம்மாவின் அரசு புதிய கல்லூரிகளை பின்தங்கிய மாவட்டங்களில் தொடங்கி வருவதாலும், முதல்தலைமுறை பட்டாதாரிகளுக்கு கல்வி கட்டண சலுகை வழங்கி வருவதாலும், விலையில்லா மடிக்கணினி, பின்தங்கிய மாணவர்களுக்கான

உதவித்தொகை போன்ற எண்ணற்ற நலத்திட்டங்களை செயல்படுத்தியதாலும், தமிழ்நாட்டில் உயர்கல்வியில் மாணாக்கர் சேர்க்கை விகிதம் **48.6** சதவிதம் உயர்ந்துள்ளது. இது தேசிய சேர்க்கை விகிதமான **25.8** சதவிகிதத்தை விட உயர்ந்ததாகும்.

தேசிய அளவில் ஆராய்ச்சிப் படிப்பில் தமிழ்நாடு தான் முதன்மையான இடத்தில் உள்ளது என மத்திய அரசின் MHRD அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் **2017–18** ஆம் ஆண்டில் **29,778** ஆராய்ச்சியாளர்கள் கலை, அறிவியல், பொறியியல், மருத்துவம், நிர்வாக மேலாண்மை ஆகிய துறைகளில் பி.எச்.டி, ஆராய்ச்சி படிப்பில் சேர்ந்து ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழ்நாட்டில் **2011** ஆம் ஆண்டு முதல் பல்வேறு பொறியியல் சார்ந்த துறைகளில் **6,914** மாணாக்கர்கள் ஆராய்ச்சி செய்து முனைவர் பட்டம் பெற்றுள்ளார்கள். **தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் உள்ள பொறியியல் கல்லூரி மாணாக்கர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களை பயன்படுத்தி தொழிற்சாலைகளுக்கு தேவையான ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளவும், திறன் மேம்பாட்டை வளர்த்துக் கொள்வதற்கும் உரிய உதவிகள் மற்றும் ஆலோசனைகளை நல்குமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலும் இம் மாணவர்களுக்கான பயிற்சியை மேம்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்க மாண்புமிகு அம்மாவின் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. படித்த மாணாக்கர்கள் அனைவருக்கு அவர்களுடைய தகுதியை மேம்படுத்தவும், அத்தகுதிக்கு உரிய வேலை வாய்ப்பினை அளிக்க வேண்டும் என்பது மாண்புமிகு அம்மாவின் அரசின் நோக்கமாகும்.**

On behalf of Government of Tamilnadu, I am happy to welcome all the captains of Industries, Experts, Heads of all Technical Institutions for this meeting.

The Government is equipping the state with sufficient and balanced work force, by conducting large number of programme under Skill Development Programme.

The State of Tamil Nadu which is known for educational infrastructure produces quality graduates and diploma holders, through various Universities, colleges, polytechnics and ITIs. Every year more than 1 lakh engineering graduates and more than 1 lakh diploma holders are passing out with degree's and diploma's from 509 Engineering Colleges and 522 polytechnic colleges and they are placed for employment through campus interviews conducted in Government Colleges and Government-Aided Colleges and by the Tamil Nadu State level placement programme.

I request you all to give your valuable suggestions to consolidate and bring out a new path to increase placement opportunities for the Engineering Graduates in Tamil Nadu.

I am also happy to launch the **Information Communication Technology Policy, 2018.**

I believe that this policy will address the aspirations of investors, especially IT and ITEs companies, MSMEs, Start-ups etc., by way of provision of Standard Administrative Incentives, Fiscal Incentives, Capital Subsidies, Tax Exemptions, Special incentives, etc., Further, it also has provisions for incubating Startups and creation of Research Parks. Awards for promoting

Green IT industry and Single Window Facilitation for early clearance from the concerned agencies are also part of this Policy.

I am happy to inform that this Government would be conducting the Second Global Investors Meet (GIM) in January, 2019 at Chennai to attract investments in various Sectors.

I would appeal to the Captains of industries present here to extend your continued support by way of fresh investments in industries and MSME sectors in the State. I hope the investments made would automatically lead to speedy development, which would contribute in a big way to further increase the GDP of the State and thereby the standard of living of the people of Tamil Nadu.

இந்த இனிய விழாவினை சிறப்பாக ஏற்பாடு செய்த அனைவருக்கும் எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணா நாமம் வாழ்க !

வளர்க மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் புகழ்!

தொடர்க மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சி!

நன்றி! வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**